மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, எந்த இடங்களில் தடுப்புச் சுவர் தேவையோ, அந்த இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

முற்பகல் 10—55

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொதுவான கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளம் கொண்ட மனித உயிர் காக்கும் காவல் தெய்வம். எனது சோழவந்தான் தொகுதியில் புகழ்மிக்க அலங்காநல்லூர் ஒன்றியப் பகுதியில் தீயணைப்பு நிலையம் இல்லாததால், சத்திரவெள்ளாளப்பட்டு என்ற ஊராட்சியில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், பொதுப் பணித் துறை அமைச்சரிடம் தீயணைப்பு நிலையம் குறித்து கேள்வி கேட்கிறீர்களே? உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

67—

கால்நடை மருத்துவமனை

***22766—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, மாதேமங்கலம் ஊராட்சி, குட்டூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குட்டூர் கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரை, நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க இயலாது. முதலிலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் கொடுத்து, கால்நடைகளின் எண்ணிக்கை 5,000—க்கும் மேல் அதிகமாகும்போது கால்நடை மருந்தகமாகவும், 10,000—க்கும் மேல் அதிகமாகும்போது கால்நடை மருத்துவமனையாகவும் அமைத்துக் கொடுக்க முடியும். அந்த அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள குட்டூர் கிராமத்திலே 3,000—க்கும் அதிகமான கால்நடை அலகுகள் உள்ளன. மனிதர்களுக்கு இணையாக கால்நடைகளுக்கும் வைத்தியம் பார்க்க வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய இலட்சியத்தை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) குட்டூர் கிராமத்திலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று, தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, செக்காரப்பட்டி கிராமத்தில் நான்கு வருடங்களுக்கு முன்பு கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்டப்பட்டது. ஆனால், கால்நடை மருத்துவர் பணியிடம் நிரப்பப்படாததால், அந்தக் கட்டடம் வீணாகும் நிலையில் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செக்காரப்பட்டியில் கால்நடை மருத்துவர் பணியிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வரலாற்றிலே இல்லாத அளவுக்கு

843 கால்நடை மருத்துவர்களை நியமித்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலேகூட எங்கும் கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்தவுடனேயே 843 கால்நடை மருத்துவர்களைப் பணியமர்த்தியது எல்லோருக்கும் தெரியும். உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற செக்காரப்பட்டி கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர்மூலம் ஆய்வு செய்து, தேவைப்படுமானால் அங்கு ஒரு கால்நடை மருத்துவரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நியமிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

ஆயத்த ஆடை

***37271—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*